SALCO
South Asian Legal Clinic of Ontario

# குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய தற்காலிக வதிவிட அனுமதி (TRP)

## குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய TRP என்றால் என்ன?

குடும்ப வன்முறை அல்லது துன்புறுத்தலை நீங்கள் அனுபவிப்பதுடன், கனடாவில் அந்தஸ்து எதுவும் பெறாவிட்டால், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்காலிக வதிவிட அனுமதி (Temporary Resident Permit - TRP) எனப்படும் விசேட அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். TRP ஒன்று பொதுவாகக் கனடாவுக்குள் "அனுமதிக்கப்பட முடியாத" ஒருவருக்கே வழங்கப்படுகின்றது, அதாவது சில காரணங்களுக்காகக் கனடாவில் நுழையவோ அல்லது தங்கவோ முடியாத அல்லது குடிவரவுச் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத ஒருவரையே இது குறிப்பிடுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில், நியாயமான காரணங்களுக்காக, TRP ஒரு நபரைக் குறுகிய காலத்திற்குக் கனடாவில் தங்க அனுமதிக்கின்றது. குடும்ப வன்முறைக்கான TRP (TRP-FV) என்பது கனடாவில் அந்தஸ்து இல்லாமல் அல்லது அந்தஸ்தை இழந்த நிலையில் குடும்பத்தில் துன்புறுத்தலை எதிர்கொண்டு வாழ்ந்து வருபவர்களுக்கானது.

## குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய TRP க்குத் தகுதியுடையவர்கள் யார்?

பின்வரும் காரணங்களுக்காகக் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய TRP ஒன்றுக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்:

SALCO
South Asian Legal Clinic of Ontario

• நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது பொதுச்-சட்டப்படி கூடி வாழ்பவரினால் துன்புறுத்தலை அனுபவித்துக்கொண்டு கனடாவில் வசித்து வருவது மற்றும்;
• நிரந்தர வதிவிட (PR) அந்தஸ்துக்கு நீங்கள் விண்ணப்பித்துள்ளீர்கள் அல்லது விண்ணப்பிக்க விரும்புகிறீர்கள், அதற்கு உங்கள் வாழ்க்கைத் துணைவர்/கூடி வாழ்பவருடன் துன்புறுத்தும் உறவுமுறையில் தொடர்ந்தும் தங்கியிருப்பதுதான் நீங்கள் PR அந்தஸ்தைப் பெறுவதற்கு உங்களுக்குள்ள ஒரேயொரு வழியாக இருப்பது
• உங்களுக்குக் குடிவரவு அந்தஸ்து எதுவும் இல்லாதிருப்பது

**உங்களுக்குத் தற்காலிகமான அந்தஸ்து இருந்தால் (வருகையாளர் நுழைவனுமதி - visitor visa போன்றன) நீங்கள் விண்ணப்பிக்கலாம். குறிப்பு:**

உங்களிடம் செல்லுபடியாகும் தற்காலிக நுழைவனுமதி ஒன்று இருந்தால் (வருகையாளர் விசா, பணி அனுமதி அல்லது படிப்பு அனுமதி போன்றன) உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். மேலும் அது காலாவதியாகி, அதை மீட்டெடுப்பதற்கான காலமும் முடிவடைந்தவுடன் நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். இது ஒரு சிக்கலான முடிவாக இருக்கலாம் அத்துடன் ஒரு வழக்கறிஞரிடம் இது குறித்துப் பேச நீங்கள் விரும்பக்கூடும்.

நீங்கள் தகுதிபெறக்கூடிய சூழ்நிலைகளுக்கான உதாரணங்களில் சில பின்வருமாறு:

SALCO
South Asian Legal Clinic of Ontario

- நீங்கள் PR ஆகுவதற்கு ஸ்பொன்சர் செய்ய உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் விண்ணப்பித்துள்ளார், ஆனால் நீங்கள் துன்புறுத்தப்பட்டதால் அவரை விட்டு வெளியேறிவிட்டீர்கள் அல்லது உங்கள் அந்தஸ்தினை இழக்க நேரிடும் என்று பயந்து நீங்கள் வெளியேறவில்லை

- உங்களைத்  துன்புறுத்தும் உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் அவரின் பொறுப்பேற்றல் விண்ணப்பத்தை மீளப் பெற்றுள்ளார்

- உங்களைத்  துன்புறுத்தும் உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் பொறுப்பேற்றல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதாக உங்களிடம் சொன்னார் ஆனால் அதைச் செய்யவில்லை

- நீங்கள் கனடாவிற்கு வருகையாளராகவோ, தொழிலாளியாகவோ அல்லது மாணவராகவோ வந்தீர்கள், மேலும் உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் மூலம் PRக்கு விண்ணப்பிக்க விரும்புகிறீர்கள், ஆனால் அந்த உறவு தவறானதாக மாறிவிட்டது, உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் பொறுப்பேற்றல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவில்லை

***நீங்கள் TRP FV க்கு விண்ணப்பிக்கும் அதே நேரத்தில், நீங்கள் கனடாவில் தங்கியிருக்கும் போது வேலை செய்ய அனுமதிக்கும் பணி அனுமதிப்பத்திரத்திற்கும் விண்ணப்பிக்கலாம். அத்துடன்,  தற்காலிகச் சுகாதாரப் பாதுகாப்பும் பெற்றுக்கொள்ளலாம்.**

SALCO
South Asian Legal Clinic of Ontario

குறிப்பு: நீங்கள் முதல் முறையாக விண்ணப்பிக்கும்போது, இந்த விண்ணப்பத்துக்குக் கட்டணம் எதுவும் இருக்காது. முதல் TRP க்குப் பின்னர் ஏதாவது TRP க்கு விண்ணப்பித்தால் மட்டுமே நீங்கள் கட்டணம் செலுத்த நேரிடும். உங்கள் ஆரம்பப் பணி அனுமதிப்பத்திரமும் இலவசம், ஆனால் பணி அனுமதியைப் புதுப்பித்தால் கட்டணம் செலுத்த வேண்டும்.

## துன்புறுத்தல்/க்கானகுடும்ப வன்முறை உதாரணங்கள்

**துன்புறுத்தல்/குடும்ப வன்முறையின் பல வடிவங்கள் இங்கு உள்ளன. ஒரு சில உதாரணங்கள் பின்வருமாறு:**

- பாலியல் ரீதியான  துன்புறுத்தல் (Sexual abuse)
- உடல் ரீதியான  துன்புறுத்தல் (Physical abuse)
- நிதித் துர்ப்பிரயோகம் (Financial abuse)
- உளவியல் ரீதியான துன்புறுத்தல் (Psychological abuse)
- புறக்கணிப்பு (Neglect)
- தனிமைப்படுத்தல் /குடும்பம் அல்லது நண்பர்களைச் சந்திக்கவோ பேசவோ அல்லது வகுப்புகளுக்குச் செல்ல அல்லது வேலை செய்ய உங்களை அனுமதிக்காதது

குறிப்பு: **துன்புறுத்தல்  ஒன்று  வன்முறையாகக் கருதப்படுவதற்கு அது உடல் ரீதியாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.**

## குடும்ப வன்முறைக்கான சான்று (Proof of Family Violence)

நீங்கள் எதிர்கொண்ட வன்முறைக்கான சான்றுகளை வைத்திருப்பது நல்லது, ஏனென்றால் குடிவரவு அதிகாரி உங்களுக்குச் சாதகமாக முடிவெடுப்பதற்கு இது உதவும். ஆனால் உங்களிடம் சான்றுகள் எதுவும் இல்லையென்றாலும்

SALCO
South Asian Legal Clinic of Ontario

பரவாயில்லை. இந்தச் சூழ்நிலையில், உங்களுக்கு என்ன நடந்தது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் IRCC க்கு விளக்க வேண்டும். உங்களிடம் ஏதாவது சான்றுகள் இருந்தால், அதை உங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கலாம். சான்றுகளுக்கான உதாரணங்களில் சில பின்வருமாறு :

- சாட்சிகளின் அறிக்கைகள்
- காவற்துறைப் பதிவுகள்
- உங்கள் மருத்துவர் அல்லது நீங்கள் சந்தித்த ஏனைய மருத்துவ நிபுணர்களிடமிருந்து ஒரு கடிதம் (ஒரு மனநல மருத்துவ நிபுணர், உளவியலாளர், சிகிச்சையாளர், ஆலோசகர், தாதியர் அல்லது பிற மருத்துவ நிபுணர்கள்)
- சமூக சேவகர் அல்லது ஆதரவு வழங்கும் ஊழியர் ஒருவரின் கடிதங்கள்
- காப்பகப் பணியாளர்களிடமிருந்து கடிதங்கள்
- உங்கள் மதநம்பிக்கைக்குரிய உறுப்பினர் ஒருவரின் கடிதங்கள் (உதாரணம்: இமாம், பாதிரியார்)
- உங்கள் காயங்களின் புகைப்படங்கள்
- துன்புறுத்துபவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற மின்னஞ்சல்கள் அல்லது உரைகள்

நீங்கள் வழங்கக்கூடிய ஆவணங்களின் அடிப்படையில், கனேடியக் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை (IRCC) அதிகாரி ஒருவர் முடிவு ஒன்றை எடுக்கலாம். தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக நேர்காணல் செய்வது பாதுகாப்பானது மற்றும் எந்த சிரமத்தையும் ஏற்படுத்தாது என்று அவர்கள் நம்பினால், அவர்கள் உங்களை அதற்கு அழைக்கக்கூடும்.

## குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான எனது TRP எவ்வளவு காலம் செல்லுபடியாகும்?

SALCO
South Asian Legal Clinic of Ontario

IRCC அதிகாரி குறைந்தபட்சம் 6 மாதங்களுக்காவது இந்த TRP ஐ வழங்குவார், ஆனால் பெரும்பாலும் 12 மாதங்களுக்காக இருக்கக்கூடும்.

**நீங்கள் எவ்வளவு காலத்திற்கு TRP பெற வேண்டும் என்பதை முடிவு செய்வதில், அதிகாரி பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்கின்றார்:**

- கனடாவுடன் உங்களுக்கிருக்கும் உறவுகள்
- சிறுவர் பாதுகாவற் பொறுப்பு அல்லது குடும்பச் சட்டம் தொடர்பாக இருக்கும் ஏதாவது சிக்கல்கள்
- உங்கள் பிரதி நடவடிக்கை மற்றும் பிற குடியேற்றத் தெரிவுகளைக் கருத்திற் கொள்ள வேண்டிய நேரம்
- துன்புறுத்துபவரிடமிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் எதிர்கால நடவடிக்கை குறித்துத் தகவலறிந்து எடுக்கக்கூடிய முடிவு ஒன்று
- வன்முறையில் இருந்து உங்களைப் பாதுகாக்க உதவுவது முக்கியம் என்று அதிகாரி நினைக்கும் வேறு ஏதாவது ஒரு காரணம்

**விண்ணப்பிப்பது எப்படி**

- உங்களுக்கு அருகிலுள்ள உள்ளூர் IRCC அலுவலகத்தில் TRP விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். நீங்கள் TRP க்கு விண்ணப்பிக்கும் அதே நேரத்தில், பணி அனுமதிப் பத்திரத்திற்கும் விண்ணப்பிக்கலாம்.
- இந்த விண்ணப்பங்கள் IRCC இணையத்தளத்தில் காணப்படுகின்றன
- உங்களுக்கு வழக்கறிஞர் ஒருவர் இருந்தால், உங்கள் சார்பாக இந்த விண்ணப்பத்தை அவர் சமர்ப்பிக்கலாம்

உங்களுக்கு வழக்கறிஞர் ஒருவர் இல்லாவிட்டால் மற்றும் TRP க்கு விண்ணப்பிக்கலாமா வேண்டாமா என்று உறுதியாகத் தெரியாவிட்டால், அல்லது TRP அல்லது உங்களின் பிற குடியேற்றத் தெரிவுகளைப் பற்றிய தகவல்களை அறிய நீங்கள் விரும்பினால்,:

- IRCC இன் பயனாளருக்கான ஆதரவு மையத்தை (Client Support Centre - CSC) 1-888-242-2100 ( [TTY] 1-888-576-8502) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்
- உள்ளூர் IRCC அலுவலகத்திற்கு நேரில் செல்லவும்
- IRCC இணையத்தளத்தில் காணப்படும் இணையப் படிவத்தில் உங்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்கவும்

**செயலாக்க நேரம் (Processing time):**

IRCC இந்த விண்ணப்பங்களை விரைவாகச் செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது. ஆனால் உங்கள் விண்ணப்பம் எவ்வளவு விரைவாகச் செயலாக்கப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.